# கல்லூரியின் ‘சியர்ஸ்’, சிற்றுண்டிச்சாலையில் ரொக்கமின்றி பொருள் வாங்கலாம்

ரொக்கப் பரிவர்த்தனையற்ற கட்டண முறையின் வசதியை தங்கள் மாணவர்களும் அனுப விக்கவேண்டும் என்ற நோக் கத்தில் நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரியில் இரு இடங் களில் அதற்கான வசதி அமைக்கப்பட்டுள்ளது.

ரொக்கப் பரிவர்த்தனையற்ற ‘சியர்ஸ்’ (Cheers) பலசரக்குக் கடை அங்கு இவ்வாண்டு ஜூலை மாதம் திறக்கப்பட்டது. ரொக்கப் பரிவர்த்தனையற்ற கட்டண முறை இருப்பதால் கடையில் காசாளர்கள் இல்லை.

இக்கல்லூரியில் இயங்கும் ‘ஃபீட்கல்’ சிற்றுண்டிச்சாலை யில் ‘டெஷ், நெட்ஸ்பே’ போன்ற ரொக்கப் பரிவர்த்தனையற்ற கட்டண முறை அண்மையில் அறிமுகமானது. வேண்டிய உணவைத் தேர்ந்தெடுத்து ‘QR–code’ வழி கட்டணம் செலுத்தலாம்.

இவ்வசதிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என் பதை தமிழ் முரசு செய்திக்குழு நேரடியாகக்கண்டறிந்தது.

புதிய முறை வந்தாலும் ரொக்கக் கட்டண முறையை



நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரியில் அமைந்துள்ள ‘சியர்ஸ்’ பலசரக்குக் கடையில் ரொக்கப் பரிவர்த்தனையற்ற கட்டண முறையில் பொருட்கள் வாங்கும் வர்த்தக நிர்வாகத் துறை மாணவர் ச.தேவன்ராஜ்.

**படம்: நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரி**

முழுமையாக நீக்கிவிடக் கூடாது என்று நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவர்கள் சிலர் கருதுகின்றனர்.

“கையில் பணம் இல்லாத தருணங்களில் ரொக்கப் பரிவர்த் தனையற்ற கட்டண முறை பயன் அளிக்கிறது,” என்று தாதியர் துறை முதலாம் ஆண்டு மாணவி யான சிநாத் பேகம், 35 தெரி வித்தார்.

“ஒரு கடையில் நீண்ட வரிசை இருக்கும்போது ஒருவர் தவறான கட்டணத்தைச் செலுத்திவிட்டால், அந்த ரொக்கமற்ற பரிவர்த் தனையை நீக்கிவிட்டு மறுபடியும் கட்டணம் செலுத்த நேரம் எடுக்கலாம்,” என்று பொறியியல் துறை 2ஆம் ஆண்டு மாணவர் பிராயண்ட் சூரியவர்மன் குமார், 19, தெரிவித்தார்.

தன்னைப் போன்று சிலருக்கு கடன், பற்று அட்டைகள் போன் றவை இல்லை என்று கூறும் அதே துறையில் பயிலும் 2ஆம் ஆண்டு மாணவர் ஷாஹுல் ஹமீத், 19, சிறு சிறு கட்டணங்களுக்காக, மற்ற முறைகளுடன் ரொக்க முறையையும் நடப்பில் வைத்தி ருப்பது உதவும் என்கிறார்.